பக்கங்கள் - 23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 04 திங்கட்கிழமை 16.02.2026 | அதிர்வு 200

## ஏ - 9 வீதியில் கோர விபத்து! ஒருவர் பரிதாப உயிரிழப்பு!!

### மற்றொருவர் படுகாயம்




ஏ – 9 வீதியின் முல்லைத்தீவு – திருமுறிகண்டி பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கோர விபத்தில் 05▶

# மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீஸ்வரத்தில் பிரதமர் வழிபாடு



மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு, வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற விசேட சிவபூஜை வழிபாடுகளில் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய கலந்துகொண்டார்.

ஆலயத்துக்கு வருகை தந்த பிரதமரை, ஆலய நிர்வாகத்தினர் மற்றும் கௌரவப் பிரமுகர்கள் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து, விசேட அபிஷேக மற்றும் ஆராதனை பூஜைகளில் அவர் பங்கேற்றார்.

நாட்டின் அமைதி, சுபீட்சம் மற்றும் இனங்களுக்கிடையிலான மத நல்லிணக்கத்தை வேண்டி நடைபெற்ற 06▶



# திம்பு கோட்பாடுகளுடன் புதிய அரசமைப்பு வரைவு

## யாழில் தமிழ்த் தரப்புகள் ஒருமனதாகத் தீர்மானம்



**தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில், திம்பு கோட்பாடுகளை முழுமையாக உள்ளடக்கிய சுயாட்சி அம்சங்களுடன் கூடிய புதிய அரசமைப்பு யோசனைகளை தயாரிப்பது என்று யாழ்ப்பாணத்தில் நேற்று ஒருமன தாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**நல்லூர் இளங்கலைஞர்** 04▶




நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சியில் சுமார் 150 முன்னாள் போராளிகள் மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றி இருக்கின்றார் என்று நேற்று எனது இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த உரையில் அவர் என்னையும் பெயர் சுட்டிக் குறிப்பிட்டிருக்கின்றார். அது பற்றி சில விடயங்களை இன்று சற்று விரிவாகச் சொல்லுவது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

அது நடைபெற்றது 2011 ஆம் ஆண்டிலாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

யுத்தத்துக்கு மத்தியில் சுமார் 25 ஆண்டு காலம் நான் உயிரைப் பிடித்துக் கொண்டு பணியாற்றிய ஊடகத்திலிருந்து என் சொந்தத் தீர்மானப்படி நான் 2010 பொதுத் தேர்தல் சமயத்தில் வெளியேறி இருந்தேன்.

அந்த வேளையில் ஒரு சில ஆண்டுகள் தமிழரசுக் கட்சியோடு இணைந்து 05▶

# வலி. வடக்கில் படை வசமுள்ள காணிகள் ஏப்ரலில் விடுவிப்பு!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதியில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களின் காணிகளில் ஒரு தொகுதி, எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் விடுவிக்கப் படவுள்ளன என்று அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

மக்களுடைய காணிகளை அவர்களிடமே மீள ஒப்படைக்க வேண்டும் என்பதில் தற்போதைய அரசு உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-




**பாதுகாப்புத் தேவையும் தற்போதைய நிலையும்**

"நாட்டில் நிலவிய அசாதாரண சூழல் காரணமாக, பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்தில் பொதுமக்களின் காணிகள் படையினரின் வசமிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எனினும், யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், மக்களின் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பது குறித்து அரசு விசேட அக்கறை கொண்டுள்ளது.

**ஜனாதிபதியின் அறிவுறுத்தல்**

வலிகாமம் வடக்கில் படையினர் வசமுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளைப் படிப்படியாக உரியவர்களிடம் கையளிக்கும் வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் நேரடி அறிவுறுத்தலுக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சு இதற்கான முதற்கட்ட ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

**ஏப்ரல் மாதத்தில் முதற்கட்ட விடுவிப்பு**

எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் வலிகாமம் வடக்கின் சில குறிப்பிட்ட பகுதிகளை மக்களிடம் மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது அரசின் இலக்காகும்." – என்றார்.

---

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

## தென்னிலங்கை துப்பாக்கிச்சூடுகள் குறித்து பொன்சேகா கருத்து



தென்னிலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று இராணுவத்தின் முன்னாள் தளபதியும் பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசு நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளைப் புரிந்துகொண்டு, அதனைச் சரியாக நிர்வகிக்கும் திறன் கொண்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்த தாவது:-

"தேசிய பாதுகாப்புக்கு என்று குறிப்பிட்ட அச்சுறுத்தல் எதுவும் தற்போதைக்கு இல்லை. கடந்த காலங்களில், சில குழுக்கள் அமைதியின்மையை உருவாக்குவதற்கும், இனவாதப் பதட்டங்களைத் தூண்டுவதற்கும், பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுவதற்கும் பழகிவிட்டன. சில தரப்பினர் தமக்கென ஒரு பிம்பத்தை உருவாக்க முனையும்போது இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

ஆயுதப் படைகள் தமது கடமைகளை ஒழுங்கான முறையில் முன்னெடுத்து வருகின்றன. ஒன்று அல்லது இரண்டு தனிநபர்கள் சம்பந்தப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்களைக் கண்டு மக்கள் பீதியடையத் தேவையில்லை. இவ்வாறான சம்பவங்கள் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் காரணியாக அமையாது.

கொழும்பு நகரில் அதிக எண்ணிக்கையிலான பாதுகாப்புப் பணியாளர்களைக் குவித்தாலும் கூட, மோட்டார் சைக்கிள்களில் வரும் தனிநபர்களால் நடத்தப்படும் திடீர் தாக்குதல்களை முழுமையாகத் தடுத்துவிட முடியாது. இவ்வாறான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அரசு உரிய மற்றும் பொருத்தமான புலனாய்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்." – என்றார்.



# இந்தியா - பாகிஸ்தான் போட்டியை நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி

இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதிய போட்டியை நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேரில் பார்வையிட்டார்.


ரி – 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெறுகின்றது. நேற்று கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதின.



இந்தப் போட்டியை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மைதானத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

முன்னதாக இந்திய மற்றும் பாகிஸ்தான அணிகளுக்கு இடையிலான போட்டியைக் கொழும்பில் நடத்துவதற்கு இராஜதந்திர ரீதியிலான காத்திரமான உரையாடல்களை ஜனாதிபதி முன்னெடுத்திருந்தார்.

இதன் பிரதிபலனாக இரு அணிகளும் இலங்கையில் போட்டியிடுவதற்கு இணங்கியமை குறிப்பிடத்தக்கது.









## திம்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில், திம்பு கோட்பாடுகளை முழுமையாக உள்ளடக்கிய சுயாட்சி அம்சங்களுடன் கூடிய புதிய அரசமைப்பு யோசனைகளை தயாரிப்பது என்று யாழ்ப்பாணத்தில் நேற்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### ஒற்றையாட்சி அரசமைப்பு நிராகரிப்பு

தற்போதைய அரசு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள, 2015 – 2019 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட 'ஏக்கிய ராஜ்ய' (ஒற்றையாட்சி) அரசமைப்பு முறையை அடியோடு நிராகரிப்பதாக இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துத் தரப்பினரும் உறுதியாகத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசம், இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்வே எட்டப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது.

### புதிய அரசியல் குழு உருவாக்கம்

கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

“இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் பங்கேற்ற அரசியல் தரப்புகள் மற்றும் அமைப்புகளைக் கொண்ட ஒரு 'பொதுச் சபை' அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஒரு விசேட 'அரசியல் குழு' அமைக்கப்படும். இக்குழுவானது திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில், தமிழ் மக்கள் சுயாட்சியை முழுமையாக அனுபவிக்கக்கூடிய அரசமைப்பு யோசனைகளைத் தயாரிக்கும் பணியை முன்னெடுக்கும்.

முக்கியமாக, தமிழ் மக்கள் பேரவையால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டு ஆலோசனைகள் பெறப்படும். மேலதிகமாக ஏனைய தரப்புகளிடம் உள்ள சிறந்த யோசனைகளும் உள்வாங்கப்பட்டு, ஒரு பொதுவான வரைவு தயாரிக்கப்படும். இந்த வரைவு மீண்டும் பொதுச் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் மக்கள் மட்டத்துக்குக் கொண்டு செல்லப்படும்.” – என்றார்.

### அனைவருக்கும் அழைப்பு

நேற்றைய நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இருந்து எவரும் கலந்துகொண்டனர் எனத் தெரியவில்லை. எனினும், இதில் பங்கேற்காத அரசியல் கட்சிகள் மற்றும் புத்திஜீவிகள் எதிர் காலத்தில் இணைய விரும்பினால் அவர்களுக்கான கதவுகள் திறந்தே இருக்கும் என்றும், அனைவரையும் அரவணைத்துத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைப் பலப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. மேலும் தெரிவித்தார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவ்வேளையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையை நானே பொறுப்பேற்று மறுசீரமைத்தேன். கொழும்பு கிளையின் செயலாளராகவும் பணியாற்றினேன். அதனால் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவிலும் இடம் பெற்றிருந்தேன்.

அப்போது கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன். செயலாளர் மாவை சேனாதி ராஜா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சிறிதரன் போன்றவர்கள் கொழும்புக் கிளைப் புனரமைப்பில் நெருங்கிச் செயற்பட்டனர். அவர்களுடன் பழகவும் வாய்ப்புக் கிடைத்தது. கிளைப் புனரமைப்புக் கூட்டங்கள் கொழும்பில் என் வீட்டிலேயே நடந்தன. அது தொடர்பான மூன்று கூட்டங்களிலும் மாவை,சுமந்திரன், சிறிதரன் மூவருமே தவறாது பங்கு பற்றினர்.

25 ஆண்டுகளுக்கு மேல் பத்திரிகையாளர் என்ற முறையில் ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் குழுக்களோடு மிக நெருங்கி பழகும் வாய்ப்பு எனக்கு இருந்தமையால் போராளிகள் தொடர்பில் மிகவும் அந்நியோன்யமான ஊடாட்டம் எனக்கு இருந்தது.

யுத்தத்தின் முடிவை அடுத்து கைது செய்யப்பட்ட 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் தொகுதி தொகுதியாக அப்போது சமூகத்தில் இணைக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களை இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்களாக்கி உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருந்தது.

என் நினைவு சரி என்றால், வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த விடயத்தை - முன்னாள் போராளிகளை தமிழரசு கட்சிக்குள் இணைத்துக் கொள்கின்ற திட்டத்தை - அந்தக் கூட்டத்தில் நான் வலியுறுத்தினேன். அந்த யோசனைக்கு கூட்டத்தில் பெரு வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்த எனக்கு அப்போது ஏமாற்றமே மிஞ்சியது. கட்சியில் அப்போது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தை மாத்திரம் கொண்டிருந்த சுமந்திரனைத் தவிர வேறு யாரும் எனது யோசனையை ஆதரிக்கவில்லை. என்னுடைய யோசனைக்கு அவர்களுடைய பிரதிபலிப்பு என்னுடைய அந்தக் கருத்தை அவர்கள் விரும்பவில்லை என்ற ஒரு மன எண்ணத்தை - ஆதங்கத்தை - எனக்கு ஏற்படுத்தியது. அந்த சமயத்தில் கூட்டத்திலிருந்த சுமந்திரன் மாத்திரம் எழுந்து நின்று, என் யோசனையை வரவேற்று, அதனை ஒரு பிரேரணையாக நாங்கள் முன் நகர்த்தி, ஒரு தீர்மானமாக நிறைவேற்றி, நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். ஆனால் அதற்கு மேல் அந்த விடயம் நகரவில்லை. அச்சமயத்தில் கட்சியில் வலிமையான ஆதிக்கத்தையோ, பிடியையோ, நிர்வாகப் பதவியையோ கொண்டிராத சுமந்திரனினால் அதற்கு மேல் எதுவும் நகர்த்த முடியவில்லை.

அச்சமயத்தில் மேற்கு நாடுகளுக்கு பயணம் செய்த என்னை நோர்வேயில் தமிழர் ஊடகம் ஒன்று பேட்டி கண்டது. அவர்கள் மத்தியில் இந்த விடயத்தை என் ஆதங்கமாக நான் எடுத்துரைத்தேன். அதிலே கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் முன்னாள் போராளிகளை கட்சியின் உறுப்பினர்களாக உள்வாங்கும் என்னுடைய யோசனைக்கு சுமந்திரன் மட்டுமே ஆதரவு தெரிவித்து இருந்தார், அதை ஒரு பிரேரணையாக முன் நகர்த்த அவர் பிரேரித்தார் என்பவற்றை அந்தப் போட்டியில் விவரித்து இருந்தேன். அதன் பதிவு இப்போதும் இருக்கின்றது. இணையத்தில் தேடினால் வாசகர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்த விவகாரத்தைத்தான் நேற்று தமது உரையில் சுமந்திரன் குறிப்பிட்டு இருக்கிறார்.

இதற்குப் பின்னாலும் இந்த விடயங்களில் சில மேலதிக தகவல்கள் உண்டு.

அந்த மத்திய குழுக் கூட்டத்திற்கு வெளியில் என்னுடைய இந்தத் திட்டத்திற்காக என்னை கடிந்து கொண்ட கட்சியின் அப்போதைய செயலாளர் மாவை சேனாதிராஜா, "எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்குமோ தெரியாது. நீர் தேவையில்லாத யோசனைகளை எல்லாம் கட்சிக்குக் கொடுத்து சிக்கல்களை வாங்கித் தர வேண்டாம்" - என்ற சாரப்பட அவர் விசனம் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளைக் கட்சியில் சேர்ப்பது குறித்து இரா.சம்பந்தனை அவரது கொழும்பு வீட்டில் அச்சமயத்தில் பல தடவைகள் நான் சந்திக்கும் போது வலியுறுத்தி வந்திருக்கிறேன்.

ஒரு நாள், எனக்கு இன்னும் நல்ல நினைவு இருக்கின்றது. சம்பந்தனின் கடைசியாக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் இல்லம் அல்ல, அதற்கு முன்னர் அவர் இருந்த கொழும்பு இல்லத்தில் அது நடந்தது.

சம்பந்தனின் அந்தக் குறுகிய அறையில் அவர் சாய்மானக் கதிரையில் அமர்ந்திருந்தார். நான் அவரது கட்டிலில் அமர்ந்திருந்தேன். முன்னாள் போராளிகளை கட்சியில் சேர்ப்பது பற்றி நான் விவரமாக கூறிக் கொண்டிருந்த போது கண்ணை மூடி செவிமடுத்துக் கொண்டிருந்த சம்பந்தன், திடீரெனக் கண் விழித்து என்னைப் பார்த்து ஆங்கிலத்தில் "நீங்கள் சிலரை (முன்னாள் போராளிகளை) தெரிவு செய்து கூறுங்கள். அவர்களுக்கு கட்சியில் பிரதேசங்களில் சில பதவி நிலைகளைக் கொடுப்போம்!" - என்றார். அதாவது கட்சியில் சில முன்னாள் போராளிகளை - அதுவும் நான் அடையாளம் கண்டு பரிந்துரைகின்ற சிலரை மட்டும் - கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற மாதிரியான அங்கீகாரம் அவரிடம் இருந்து வந்தது.

அந்தச் சமயத்தில் முன்னாா போராளிகளை தமிழரசுக் கட்சியில் அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்வது குறித்து சுமந்திரனிடமும் நான் சில தடவைகள் பேசியிருக்கிறேன். ஆனாலும் அச் சமயங்களில் அத்திட்டத்திற்கு அவர் கொள்கை அளவில் ஆதரவும் விருப்பமும் கொண்டிருந்தாலும், கட்சி ரீதியில் அதை ஒரு முடிவாகத் தனித்து எடுத்து செயல்படுத்தும் அந்தஸ்து கொண்டவராக கட்சியில் இருக்க வில்லை. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அவரை சட்டரீதியாகத் தங்கள் ஆலோசனைகள், தேவைகளுக்கு சம்பந்தனும் சேனாதிராஜாவும் கட்சியும் பயன்படுத்தும் நிலையே இருந்தது.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் முன்னாள் போராளிகளைத் தமிழரசுக் கட்சியில் சேர்க்கும் எண்ணத்துக்கு ஆதரவாக சுமந்திரன் இருந்தார் என்பதை என்னால் இன்றும் நினைவில் கொள்ள முடிகிறது.

அச்சமயத்தில் முதல் தடவையாக நாடாளுமன்றுக்கு தெரிவாகியிருந்த சிறிதரனும் கட்சியில் முக்கிய நிலையில் இருக்கவில்லை. அவருடன் இதுபற்றி பேசினேனா என்று நினைவு எனக்கு இல்லை. பேசியிருக்க கூடும். ஆனால் அவர் எந்தச் சமயத்திலும் என்னுடைய திட்டத்தை எதிர்த்தவர் அல்லது வரவேற்காதவர் என்ற மனநிலை - மனப்பதிவு - எனக்கு ஏற்படவில்லை என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இந்த விவகாரத்தை ஒட்டி சுமந்திரன் நேற்று முன்தினம் கூறிய விடயம் தொடர்பான இணைப்பை இங்கு பகிர்ந்து உள்ளேன்.




## ஏ - 9 வீதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஏ – 9 வீதியில் பயணித்த கார் ஒன்று, மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

வைத்தியர் ஒருவர் செலுத்தி வந்த கார், மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தனர்.

விபத்தை ஏற்படுத்திய காரைச் செலுத்திய வைத்தியரே, மனிதாபிமான அடிப்படையில் காயமடைந்த இருவரையும் உடனடியாக மீட்டு வைத்திய சாலையில் சேர்த்தார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றையவர் பலத்த காயங்களுடன் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்து தொடர்பாகக் காரைச் செலுத்திய வைத்தியரை மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீஸ்வரத்தில் பிரதமர் வழிபாடு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழிபாடுகளில், பிரதமருடன் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பெருந்திரளான பக்தர்களும் கலந்துகொண்டனர்.

சிவராத்திரி தினத்தில் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருகேதீஸ்வரத்துக்குப் பிரதமர் வருகை தந்தமையானது, நாட்டின் கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

வழிபாடுகளின் பின்னர், பிரதமர் ஆலய வளாகத்தில் கூடியிருந்த மக்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியதுடன், ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்புகளையும் கேட்டறிந்துகொண்டார்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திராணியற்ற ஹரிணி

‘பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது’ என்பார்கள்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று மன்னார் அடம்பன் பிரதேசத்தில் மன்னார் மாவட்ட மகளிரைச் சந்தித்து அவர்கள் மத்தியில் உரையாற்றிய சமயம் கூறிய விடயங்கள் இந்தப் பழமொழியைத்தான் நினைவூட்டி நின்றன.

“நாட்டின் பெரும்பான்மையான பெண்கள் தமது தாய், தந்தை, மகன், மகள், சகோதர, சகோதரிகள் இல்லாமல் தவிப்பதை நாம் அறிவோம். அப்படிப் பாதிக்கப்படும் பெண்கள் இந்தப் பகுதியில் அதிகம் இருப்பதையும் நாம் அறிவோம்.

“நாட்டில் ஏற்பட்ட போர் முடிந்து நீண்ட வருடங்களாகியும் மக்களின் உள்ளங்களில் இன்னும் அமைதி இல்லை. தங்கள் குடும்பங்களுக்கு என்ன ஆனது என்று கண்டுபிடிக்க முடியாத பெண்கள் இன்னும் இருக்கிறார்கள்.” - என்று அவர் கூறியிருக்கின்றார்.

வடக்கிலும் கிழக்கிலும் தமது அன்புக்குரிய உறவுகளை இழந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகளின் நிலை குறித்து அறிவதற்காக தொடர்ந்து போராடி வருகிறார்கள். அப்படி உறவுகளைத் தேடும் அபலைப் பெண்கள் ஆயிரக் கணக்கானோர் உள்ளனர். அவர்களின் சரிதம் - அவலம் - வடக்குக் கிழக்கு எங்கும் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது.

தங்கள் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதைகண்டறியமுடியாதநிலையை அவர்களுக்கு ஏற்படுத்திய தரப்புகளில், அது குறித்து இன்று பேசும் பிரதமரின் தேசிய மக்கள் சக்தியும் பிரதான பங்காளி என்பதை பிரதமர் மறந்துவிட்டு - அல்லது மறைத்துக் கொண்டு - அல்லது மறுத்தபடி - மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கின்றார் என்றுதான் எண்ண வேண்டி உள்ளது.

யுத்தத்தின்போது தமது உறவுகளை தொலைத்த பெண்கள் பற்றி பிரதமர் பேசுகிறார். நல்லது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் நீதி, நியாயமான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - சட்ட விசாரணைகளை நடத்தும்படி சர்வதேசமே இலங்கையை வலியுறுத்தி நிற்கின்றது.

அப்படி இலங்கையின் பாதுகாப்பு தரப்பினருக்கு எதிரான விசாரணைகளை நடத்தி, உண்மைகளை கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக்கூறலை அர்த்தமுள்ள வகையில் நடைமுறைப்படுத்தும் திராணி பிரதமர் ஹரிணி அமரசூரிய அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் சக்தி உட்பட தென்னிலங்கை கட்சிகள் எவற்றுக்கும் கிடையாது.

அப்படி இருக்கையில் - யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி, நியாயமான விசாரணைகளை நடத்துவதற்கு தென்னிலங்கை அரசு இணங்காத வரையில் - யுத்தத்தில் காணாமல் போன தமது உறவுகள் குறித்து பிரதமர்குறிப்பிடும்அபலைப்பெண்கள் அலத்தோடு காத்திருக்க வேண்டியதுதான்.

பிரதமரின் அரசு நினைத்தால் இந்த அபலைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து நீதி, நியாயமான விசாரணைகள் நடத்தி உண்மைகள் வெளிக் கொணர முடியும்.

ஆனால் அப்படிச் செய்வதற்கு முதுகுத் திராணி இல்லாத தேசிய மக்கள் சக்தி அரசு, உண்மைகளைக் கண்டறிந்து வெளிக் கொணரும் என்று நம்புவதற்கு இடம் ஏதும் இல்லை.

# மின்கட்டணத்தில் 13.56 வீத உயர்வு

## மின்சார சபை பரிந்துரைப்பு

மின்சாரக் கட்டணத்தை 13.56 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் மின்சாரக் கட்டணம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் இலங்கை மின்சார சபையால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் விசேட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்போதே, மின்சாரக் கட்டணத்தை 13.56 வீதத்தால் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ඒප்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 30ஆம் திகதிவரையான காலப் பகுதியைக் கருத்திற்கொண்டே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD






## ஐ.எம்.எவ். பணிப்பாளர்

# ஜோர்ஜிவா இன்று இலங்கை வருகை!

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா இன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய உதவிகள் காரணமாகவே இலங்கை திவால் நிலையில் இருந்து மீண்டது. தற்போது ஐந்தாம் கட்ட கடன் விடுவிப்புக்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையிலேயே, நாணய நிதியத்தின் பணிப்பாளர் ஜோர்ஜிவா இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 18ஆம் திகதிவரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார். இந்தக் காலப் பகுதியில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட பிரதிநிதிகளை அவர் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்துவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், டித்வா புயலால் இலங்கையில் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா நேரில் பார்வையிடவுள்ளார்.

டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்பைத் தொடர்ந்து, இலங்கைக்கு விசேட நிதியை நாணய நிதியம் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இனப்பிரச்சினைக்கு அரசமைப்பின் ஊடாக நிரந்தர தீர்வு உறுதி!

## பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு



இலங்கையில் நீண்ட காலமாக நிலவும் இனப்பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பு ஊடாக நிரந்தர தீர்வு காணப்படும் என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில் அரசமைப்பு உருவாக்கப் பணிகள் தொடர்பில் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, அரசமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. அவர்களின் பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படவில்லை. இதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி அநுரவின் அரசில் தமிழர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்பதே அரசின் நோக்கமாக உள்ளது.

இனவாதம் இல்லாத நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே எமது கனவு. அந்த இலக்கை நோக்கி நாங்கள் நகர்ந்து வருகின்றோம்.

அரசமைப்புப் பணிகளுக்கு அனைத்துத் தரப்புகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." – என்றார்.

# டிப்பர் விபத்தில் ஒருவர் படுகாயம்!

யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் டிப்பரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தியில் இருந்து நிலாவரை செல்லும் வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நபர் முதற்கட்ட சிகிச்சைகளைத் தொடர்ந்து, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சுமுகமாக இடம்பெற்ற சிவராத்திரி வழிபாடுகள்

(விஜயரத்தினம் சரவணன்)

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று சிவராத்திரி தின பூசை வழிபாடுகள் எவ்வித இடையூறுகளுமின்றி சுமூகமான முறையில் இடம்பெற்றன.

கடந்தகாலங்களில் இந்த ஆலயத்தில் சிவராத்திரிதின வழிபாடுகளின் போது பொலிஸாரால் கடுமையான குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில் இம்முறை இடம்பெறும் சிவராத்திரி தின பூசை வழிபாடுகளில் குழப்பங்கள் ஏற்படுத்தப்படாது சைவ மக்கள் சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட வேண்டுமெனவும், சைவப்பெருமக்களின் வழிபாட்டுரிமை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கடந்த 13 ஆம் திகதியன்று இடம்பெற்ற வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வலியுறுத்தியிருந்தார். அதன்போது சைவமக்கள் சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படுமென வன்னிமாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரும்பிரதிஅமைச்சருமான உபாலி சமரசிங்கவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய ஆலயத்தில் சிவராத்திரி தினத்திலே சுமுகமாகவும் சிறப்பாகவும் சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

வெடுக்குநாறி மலை உச்சியில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரப் பெருமானுக்கு அபிசேகம் செய்யப்பட்டு பூசைவழிபாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு அங்கு சிவராத்திரிதின கலைநிகழ்வுகளும் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

ஆலயத்திற்குச் செவ்வதற்கான வீதி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆலயத்தில் இடம்பெறும் சிவராத்திரி வழிபாடுகளுக்கு பக்தர்கள் சென்று வருவதற்காக ஆலய நிர்வாகத்தினரால் டிராக்டர்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

பெருத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பெருந்திரளான பக்தர்கள் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பூசை வழிபாடுகளில் பங்கேற்றிருந்தனர். வன்னிமாவட்ட

தொடர்ச்சி▼

























# வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சுமுகமாக இடம்பெற்ற சிவராத்திரி வழிபாடுகள்

தொடர்ச்சி▲

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வவுனியா வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான செல்வராசா சுசீலன், தர்மலிங்கம் சுசீலன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வவுனியா வடக்கு பிரதேசக் கிளையின் செயலாளர் ச.தவேந்திரராசா, வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வவர் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பூபலசிங்கம், செயலாளர் ச.வசந்தன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

ஆலயத்திற்குச் செல்லும் பாதை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தமையால் பக்தர்களுக்கான போக்குவரத்து சேவையை வழங்கிய டிராக்டர்கள் புதையுண்டன. ஆலயத்திற்கு குடி தண்ணீர்த் தாங்கியை எடுத்து வந்த டிரக்டரும் புதையுண்டதால் சிறிது நேரம் போக்குவரத்து தடங்கலும் ஏற்பட்டிருந்தது.


ஆலயத்திற்குச் செல்வதற்கான வீதிச்சீரமைப்புத் தொடர்பில் எதிர்காலத்தில் தம்மால் கவனஞ் செலுத்தப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்திற்குச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் பாதிக்கப்பட்டுள்ள இந்த வீதி வனவளத் திணைக்களத்தினுடைய பகுதிகளை ஊடறுத்துச் செல்வதால் வனவளத்திணைக்களத்தின் அனுமதி பெறவேண்டியிருப்பதாகவும், அதற்கமைய அனுமதியைப் பெற்று வீதியை சீரமைப்பதுதொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படுமென ரவிகரன் மேலும் தெரிவித்தார்.

சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெறும்போது வெடுக்குநாறிமலை ஆலயச்சூழலில் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.













# திருக்கேதீஸ்வரத்தில் பக்திபூர்வமாக இடம்பெற்ற மகா சிவராத்திரி நிகழ்வு

## லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் பாடல் பெற்ற தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் இன்று அதிகாலை வரை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வருகைதந்தமையோடு வெளிநாடுகளில் இருந்தும் விசேடமாக பக்தர்கள் வருகை தந்திருந்தனர்.

காலை தொடக்கம் பல்வேறு பட்ட சமய நிகழ்வுகள் பூஜைகள் இடம்பெற்றன. சமயச் சொற்பொழிவுகள இடம் பெற்றன.


சிவராத்திரியை ஒட்டி பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு விசேட போக்குவரத்து சேவைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.















# சிவராத்திரியை முன்னிட்டு மட்டு. கல்லடியில் நேற்று பாரதத்தின் பழமைமிகு ஜோதிலிங்க தரிசன வழிபாடு

**(மட்டக்களப்பு நிருபர்)**

மகா சிவராத்திரி முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்தில் பல்வேறு சிவ வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை மட்டக்களப்பு பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 12 ஜோதி லிங்க தரிசன வழிபாட்டு நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணம் சேர்க்கும் சமூகப் பணியும் முன்னெடுக்கப்பட்டது,

சிவராத்திரி வழிபாடுகளை முன்னிட்டு பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

சிவராத்திரியை ஒட்டி பொதுமக்களின் மனக்குறையை தீர்க்கும் மகா யாக நிகழ்வும் அங்கு முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் இடம்பெறுகின்ற இந்த ஜோதிலிங்க தரிசன நிகழ்வில் மாவட்டத்தில் உள்ள அதிக எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டு சிவ வழிபாடுகளில் ஈடுபட்டனர்.























# போர் முடிந்து நீண்ட வருடங்கள் கடந்தும் உள்ளங்களில் இன்னும் அமைதி இல்லை!

## தமது உறவுகளைத் தேடும் பெண்கள் இன்னும் இருக்கிறார்கள்; மன்னாரில் பிரதமர் உருக்கம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டில் ஏற்பட்ட போர் முடிந்து நீண்ட வருடங்களாகியும் மக்களின் உள்ளங்களில் இன்னும் அமைதி இல்லை. தங்கள் குடும்பங்களுக்கு என்ன ஆனது என்று கண்டுபிடிக்க முடியாத பெண்கள் இன்னும் இருக்கிறார்கள் என பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

மன்னார், அடம்பன் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மன்னார் மாவட்ட மகளிர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மாற்றியமைக்க எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. ஆரம்பிக்கப்பட்டுள்ள மாற்றத்தை முன்னெடுத்துச் செல்ல பெண்களும் முன்வர வேண்டும் .

எங்கள் அரசாங்கம் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் மாற்றத்தை கொண்டு வந்துள்ளமை உங்களுக்குத் தெரியும். புள்ளி விவரங்களின்படி, மக்கள் தொகையில் சுமார் 52 வீதம் பெண்கள். அதாவது நம் நாட்டில் ஒரு சக்திவாய்ந்த மக்கள் கூட்டம். ஆனால், பல்வேறு துறைகள் என்று வரும்போது, வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சுனைகள் என்று வரும்போது, நடைமுறையில் இந்த சக்தி நம்மிடம் இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை.

நம் நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்று போர். வன்முறை. நாங்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் இருந்தோம். உண்மையில் யுத்தம் காரணமாக நாம் பிளவுபட்ட நாடாக மாறினோம். இதனால், பெண்கள் அதிகளவில் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

நாட்டின் பெரும்பான்மையான பெண்கள் தாய், தந்தை, மகன், மகள், சகோதர, சகோதரிகள் இல்லாமல் தவிப்பதை நாம் அறிவோம். அப்படிப் பாதிக்கப்படும் பெண்கள் இந்தப் பகுதியில் அதிகம் இருப்பதை நாம் அறிவோம்.

போர் முடிந்து நீண்ட நாள்களாகி விட்டாலும் உள்ளங்களில் இன்னும் அமைதி இல்லை. தங்கள் குடும்பங்களுக்கு என்ன ஆனது என்று கண்டுபிடிக்க முடியாத பெண்கள் இன்னும் இருக்கிறார்கள். தனியாக குடும்பத்தை நடத்துவதற்கு உழைக்கும் பெண்கள் ஏராளம்.

இனவாதத்திற்கு எதிராக எமது அரசாங்கம் பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இந்த நாட்டில் உள்ள அனைவரும் பாதுகாப்பாகவும் சம உரிமையுடன் வாழ விரும்புவதை நாம் அறிவோம்.

ஆனால் இனவாத முகாம்கள் ஒன்றுக்கொன்று முரண்பாட்டை உருவாக்க முயற்சிக்கின்றன. ஊழலை ஒழித்து அவர்களுக்கான ஜனநாயகத்தை பாதுகாக்கவும், சட்டத்தை சமமாக பயன்படுத்தவும்பொருளாதாரத்தைவலுப்படுத்த வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் அதிகாரம். இது சாமானியர்களுக்கு அல்ல, அவர்களுக்கு மட்டுமே.

இந்த நாட்டின் வளங்களை எவ்வளவு அழித்தார்கள் என்பதை நாம் அறிவோம். 2022 இல், நாடு ஒரு பெரிய பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டது. ஆனால், 2025 ஆம் ஆண்டுக்குள் திருட்டு, ஊழல், வீண் விரயம் ஆகியவற்றை தடுத்து, பொருளாதாரத்தை வலுப்படுத்த நமது அரசால் முடிந்தது.

அதன் காரணமாகவே, டித்வா சூறாவளியின் போது யாருக்கும் கடன் படாமல் மக்களுக்கு உதவ முடிந்தது.

சமீபத்தில், 21 ஆண்டுகளுக்குப் பிறகு, பால் பண்ணையாளர்கள் மில்கோவின் லாபத்தைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது ஒரு வருடத்திற்குள், வருமான ஆதாரங்களை அதிகரிக்கவும், நிறுவனங்களில் விரயத்தை குறைக்கவும், லாபத்தை விநியோகிக்கவும் முடிந்தது.

இடிந்து விழுந்த நிறுவனங்கள் புனரமைக்கப்படும். மோசடி, ஊழல் ஒழிக்கப்படும். அரசியல்வாதிகளின் வீண் விரயம் நிறுத்தப்பட்டு, மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும். இனவாதத்தை தூண்டி நாட்டை மீண்டும் கொண்டு செல்ல சிலர் செயற்படுகின்றனர்.

இனவெறியால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான். பிரிவினையையும் ஒற்றுமையையும் மீண்டும் அனுமதிக்க வேண்டுமா? இல்லை, அதற்கு பெண்தலைமைதேவை. நாம்தொடங்கிய மாற்றத்தை முன்னெடுத்துச் செல்ல பெண்கள் முன்வாருங்கள்.

எங்களுக்கு இன்னும் நிறைய வேலைகள் இருக்கின்றன. முன்னோக்கி நகர்வதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று தடுக்க முடியாது.

நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று போதைப்பொருள், இதற்கு எங்கள் குழந்தைகள் பலியாகி விட்டார்கள் என்று நாங்கள் பயப்படுகிறோம்.

இதனால் குடும்ப தகராறு ஏற்பட்டுள்ளது. இந்தப் போதைக்கு அடிமையானதால் வெளியூர் செல்லவும், வீடுகளை மூடிக் கொண்டு செல்லவும் பயப்படுகி

தொடர்ச்சி▼






# போர் முடிந்து நீண்ட வருடங்கள் கடந்தும் உள்ளங்களில் இன்னும் அமைதி இல்லை!

## தமது உறவுகளைத் தேடும் பெண்கள் இன்னும் இருக்கிறார்கள்; மன்னாரில் பிரதமர் உருக்கம்

தொடர்ச்சி▲

றார்கள். விஷத்தன்மை வாய்ந்த போதைப்பொருள்களை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதாக ஜனாதிபதி விசேடமாக உறுதியளித்துள்ளார். இத்தனை காலம் ஆட்சியில் இருந்தவர்கள் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தனர்.

சட்டத்தை அமுல்படுத்தும் வாய்ப்பை பொலிஸார் இழந்தனர். ஆனால் இன்று சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளோம். இன்று பொலிஸார் தமது கடமைகளை சரியாக செய்ய முடிந்துள்ளது. நீதிமன்றம் சுயாதீனமான முடிவுகளை எடுக்கிறது. தவறு செய்தால் தண்டிக்கப்பட வேண்டும். சட்டம் அனைவருக்கும் ஒன்றுதான். சட்டத்தின் பாதுகாப்பு சரியாக நடைமுறைப்படுத்த படாத இடங்கள் இன்னும் இருப்பதை நாம் அறிவோம்.

வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் பெண்களும் குழந்தைகளும் இன்னும் உள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சட்டம் சிறப்பாக செயல்பட வேண்டும். நீதிமன்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து இது போன்ற வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் கல்வியில் அதிக முயற்சி செய்கிறார்கள். அதனால்தான் அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்க பாடுபடுகிறோம்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஆண்டு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கிறோம். அந்த ஆசிரியர்கள் கண்டிப்பாக காலி பணியிடங்கள் உள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுவார்கள். தலைமையாசிரியர்கள் முறையாக நியமிக்கப்படவில்லை. இந்த காலியிடங்கள் அனைத்தையும் நிரப்ப கடந்த ஆண்டு முதல் தொடங்கினோம்.

அதேநேரம் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரிய பள்ளிகள், சிறிய பள்ளிகள் என்ற வித்தியாசம் இல்லை, ஒவ்வொரு பள்ளியிலும் நம் குழந்தைகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பள்ளியை உருவாக்கி வருகிறோம். அந்தப் பள்ளியின் பெயரை சொல்லி அனுப்புமாறு மாவட்ட வளர்ச்சிக் குழுக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கு ஸ்மார்ட் கிளாஸ் ரூம் கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறோம். அதன் மூலம் இந்த ஆண்டு முதல் முதலாண்டு புதிய பாடத்திட்டத்தின் கீழ் கல்வி வழங்கத் தொடங்கினர்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்பவே நாம் ஆட்சியில் அமர்த்தப்பட்டோம், அதைச் செய்ய வேண்டும். பெண்களும் பொருளாதாரத்தில் அதிகம் வேலை செய்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே கிடைக்கிறது. அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

குழந்தைகளை சுயதொழில் செய்வதிலிருந்தும் அல்லது வீட்டில் இருந்து வேலை செய்வதிலிருந்தும் பாதுகாக்க இடங்கள் உருவாக்கப்பட வேண்டும். – என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பில்நாடாளுமன்றஉறுப்பினர் ஜெகதீஸ்வரன் மற்றும் நகர சபை, பிரதேச சபைகளின் மக்கள் பிரதிநிதிகள், பெண்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.








# சிவராத்திரியன்று நந்திக் கொடி நிகழ்வு

நேற்று சிவராத்திரி தினத்தன்று உலக சைவப் பேரவையின் கொழும்புக் கிளையின் தலைவர் “விடைக் கொடிச் செல்வர்” சின்னத்துரை தனபாலா ஏற்பாட்டில் கொடி தின நிகழ்வு பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலய முன்றிலில் விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து நடைபெற்றது.

கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்த மகராஜ் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்க பிள்ளையார் கோயில் அறங்காவலர் சுந்தரலிங்கத்திறகு முதல் நந்திக் கொடி வழங்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இந்து திணைக்கள அதிகாரிகள், கோயில் அறங்காவலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சைவ சமயத் தொண்டர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். அனைவருக்கும் கொடி வழங்கப்பட்டது.

**(படப்பிடிப்பு:எஸ்.எம்.சுரேந்திரன்)**














# இன்று நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து விலகுவதற்கு சட்டத்தரணிகள் சங்கம் முடிவு



ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

15th February 2026

**BRIEFING OF THE DECISIONS TAKEN AT THE SPECIAL GENERAL MEETING OF THE BAR ASSOCIATION OF SRI LANKA ON 15TH FEBRUARY 2026**

The General Membership of the Bar Association of Sri Lanka ("BASL") gathered in large numbers today, 15th February 2026, at a Special General Meeting of the membership, convened in view of the brutal killing of Mr. Buddhika Mallawa Arachchi, *Attorney-at-Law* and his wife in broad daylight in a high security area.

Taking into consideration the grave concerns expressed by the membership about the existential threat faced by Attorneys-at-Law, as highlighted by this inhuman assassination of Mr. Mallawa Arachchi, AAL and the similar dangers faced by the Judiciary, as shown by the shocking murder of later Hon. Sarath Ambepitya, High Court Judge in November 2004, and with a view to demonstrating the collective desire of the membership to meaningfully express its strong resolve to assist in the process of remedying this grave situation, the membership unanimously decided as follows:

1. To compel the Government to take urgent and robust measures to bring an end to the current culture of brutal killings and to ensure public security;
2. All Attorneys-at-Law to refrain from appearing in all Courts throughout the country on Monday, 16th February 2026;
3. To call upon the Law Enforcement Authorities to forthwith apprehend the perpetrators of these brutal killings and to expeditiously take steps according to law;
4. To express the utmost displeasure of the BASL, with regard to the public circulation and attempts of narrative creation through unverified information attributed as having been communicated by the Police.

Rajeev Amarasurlya
President
Bar Association of Sri Lanka

Chathura A. Galhena
Secretary
Bar Association of Sri Lanka

President Rajeev Amarasuriya | Deputy President Rienzie Arsecularatne PC | Secretary Chathura A. Galhena | Treasurer Pasindu Silva | Assistant Secretary Sarinda Jayawardena
No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2331697 E-mail : info@basl.lk Web : www.basl.lk

அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்டமையை கண்டித்து, அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் இன்று திங்கட்கிழமை நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து விலகத் தாங்கள் தீர்மானித்துள்ளனர் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்திலேயே சங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில் சுமார் 3,500 சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர். ஒரு பகுதியினர் இணையத் தொழில்நுட்பம் ஊடாக இக்கூட்டத்தில் இணைந்துகொண்டனர் என அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக ரஜீவ் அமரசூரிய தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பல விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அதன்படி, தற்போது நாட்டில் நிலவும் படுகொலை கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கான யோசனைகளை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடூரக் குற்றத்துடன் தொடர்புடைய அனைவரையும் உடனடியாகக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸார் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைப்புகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், உறுதிப்படுத்தப்படாத தகவல்களை சமூகமயப்படுத்துவது அல்லது அவற்றை உண்மை எனச் சித்திரிப்பது தொடர்பில் பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது சங்கம் தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு கரவெட்டி ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றவர் மாயம்!

## முதலையிடம் அகப்பட்டிருக்கலாம் என சந்தேகம்

(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் ஆற்றில் மீன் பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் வீடு திரும்பாத நிலையில் கிராம மக்கள் அவரைத் தேடி வருகின்றனர்.

கரவெட்டியைச் சேர்ந்த நல்லரெத்தினம் யோகராசா (வயது 63) என்பவர் வழமை போன்று கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் கரவெட்டி ஆற்றின் களப்பு பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்றவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் வரை வீடு திரும்பாத நிலையில் கடந்த இரு தினங்களாக ஆற்றுப் பகுதியில் உறவினர்களும் கிராம மக்களும் அவரைத் தேடி வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக வவுணதீவு பொலிஸாரிடமும் இவரது உறவினர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த ஆற்றுப் பகுதியில் முதலைகளின் நடமாட்டம் உள்ளதாகவும் இவரை முதலை பிடித்திருக்கலாம் எனவும் கிராம மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இப் பகுதியில் நான்கு வருடங்களுக்கு முன்னர் மீனவர் ஒருவரை முதலை பிடித்து இழுத்துச்சென்ற பின்னர் அவரது உடல் பாகங்களை பிரதேச மக்கள் மீட்டனர் எனவும் அறிய முடிகிறது.

## கொழும்பில் இந்தியா இரு முனைத் தாக்குதல்

## ஒருபுறம் இஷான் கிஷான் வெறியாட்டம்

## மறுபுறம் பந்துவீச்சாளர்கள் ஆவேசம்

# பணிந்தது பாகிஸ்தான்








கொழும்பில் வைத்து நேற்றிரவு இந்தியா தொடுத்த இருமுனைத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பாகிஸ்தான் பணிந்தது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்தி வருகின்றன.

இதில் நேற்று இரவு கொழும்பில் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் களம் கண்டன.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, முதல் ஓவரில் முதல் ஓட்டத்தைப் பெற்றிருந்தபோது முதல் விக்கெட்டாக இஷாந்த சர்மாவை (0) இழந்தது.

இதையடுத்து மறுமுனையில் நின்ற இஷான் கிஷான் வெறிகொண்டு ஆடினார். அவர் அதிரடியாக ஆடி 40 பந்துகளில் 77 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் 'போல்ட்'டானார்.

அவர் ஆட்டமிழந்தபோது 8.4 ஓவர்களில் 88 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது இந்தியா.

அவரின் ஆட்டமிழப்புக்குப் பின்னர் இந்தியாவின் ஓட்ட விகிதம் மந்தமானது. எனினும், 20 ஓவர்கள் நிறைவில் அந்த அணி 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 175 ஓட்டங்களைச் சேர்த்தது.

திலக் வர்மா 24 பந்துகளில் 25 ஓட்டங்களையும் சூர்யகுமார் யாதவ் 29 பந்துகளில் 32 ஓட்டங்களையும் ஷிவம் துபே 17 பந்துகளில் 27 ஓட்டங்களையும் அடித்தனர். ரிங்கு சிங் 4 பந்துகளில் 11 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தான் அணி சர்பாக பந்து வீச்சில் சயீம் ஆயுப் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 176 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தானின் விக்கெட்டுகளை இந்தியப் பந்துவீச்சாளர்கள் தாறுமாறாகச் சாய்த்தனர்.

ஹர்திக் பாண்டியா வீசிய முதல் ஓவரின் 4ஆவது பந்தில் சஹிப்சதா ஆட்டமிழந்தார். அந்த ஓவரை ஹர்திக் பாண்டியா மெய்டன் ஓவராக வீசினார்.

தொடர்ந்து பாகிஸ்தானின் விக்கெட்டுகள் மளமளவென சராசரி இடைவெளியில் சரிக்கப்பட்டன.

ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் அணி 100 ஓட்டங்களைக் கடப்பதே கேள்விக் குறியாக இருந்தது

இறுதியில் பாகிஸ்தான் 18 ஓவர்களில் 114 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதையடுத்து இந்தியா 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியா சார்பாக பந்துவீச்சில் பும்ரா, அக்சர் படேல், வருண் சக்ரவர்த்தி, ஹர்திக் பாண்டியா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். யாதவ் மற்றும் வர்மா ஆகியோர் எஞ்சிய விக்கெட்டுகளை தலா ஒன்றுப்படி பிடுங்கி எடுத்தனர். பாகிஸ்தான் சார்பாக துடுப்பாட்டத்தில் உஷ்மான் கான் அதிகபட்சமாக 44 ஓட்டஙகளைச் சேர்த்திருந்தார்.

ஆட்டநாயகனாக இஷான் கிஷான் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா 3 போட்டிகளில் வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியது.




# சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி அதிரடி நமீபியாவை வென்றது அமெரிக்கா

நமீபியாவுக்கு எதிரான ரி-20 உலகக் கிண்ண ஆட்டத்தில் சஞ்சய் கிருஷ்ணமூர்த்தியின் அதிரடி கைகொடுக்க அமெரிக்கா வென்றது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற 26ஆவது லீக் போட்டியில் நமீபியா மற்றும் அமெரிக்கா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற அமெரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 199 ஓட்டங்களைக் குவித்தது.

அமெரிக்கா சார்பாக கடைசி ஓவர்களில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி 33 பந்துகளில் 68 ஓட்டங்கள் (4 பௌண்டரிகள், 6 சிக்ஸர்கள்) விளாசினார்.

நமீபியா சார்பாக பந்துவீச்சில், விலெம் மைபர்க், கெர்ஹட் எராஸ்மஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் கடின இலக்கைத் துரத்திய நமீபியா அணியின் தொடக்க வீரர்களான லௌரென் மற்றும் ஜான் ஆகியோர் சிறப்பான தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர்.

ஜான் 15 பந்துகளில் 19 ஓட்டங்கள் (ஒரு பௌண்டரி, ஒரு சிக்ஸர்) அடித்து ஆட்டமிழந்த நிலையில், லௌரென் 39 பந்துகளில் 58 ஓட்டங்கள் (5 பௌண்டரிகள், 3 சிக்ஸர்கள்) விளாசினார். அடுத்துக் களமிறங்கிய நிகோல் லாஃப்டி ஈடன் 17 பந்துகளில் 28 ஓட்டங்கள் (4 பௌண்டரிகள்) எடுத்தார்.

நல்ல தொடக்கம் கிடைத்த போதிலும் இடையில் நமீபியா வீரர்கள் தடுமாறினர்.

அமெரிக்கா அணியின் ஷேட்லி 2 விக்கெட்டுகளையும், சௌரப் நெட்ராவல்கர், அலி கான் மற்றும் ஷ்ஃபம் ரஞ்சேன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். மற்ற வீரர்கள் ஓட்டங்களைக் கட்டுப்படுத்தினர்.

இதனால் நமீபியா அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 168 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்துத் தோல்வியடைந்தது.

அமெரிக்கா அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக அமெரிக்காவின் சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி தெரிவானார்.

## ரி-20 உலகக் கிண்ணம்: அணிகளின் நிலை - 15.02.2026

### குழு - ஏ

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 3.050 |
| 2 | ஐ.அமெரிக்கா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | 0.788 |
| 3 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | -0.403 |
| 4 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -1.352 |
| 5 | நமீபியா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -2.443 |

### குழு - பி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 3.125 |
| 2 | சிம்பாப்வே | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.984 |
| 3 | ஆஸ்திரேலியா | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 1.100 |
| 4 | அயர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | 0.150 |
| 5 | ஓமன் | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.546 |

### குழு - சி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மே.இ.தீவுகள் | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.820 |
| 2 | இங்கிலாந்து | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | -0.143 |
| 3 | ஸ்கொட்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | 0.359 |
| 4 | இத்தாலி | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.352 |
| 5 | நேபாளம் | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.942 |

### குழு - டி

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென்னாபிரிக்கா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.477 |
| 2 | நியூசிலாந்து | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.701 |
| 3 | ஐ.அ.இராச்சியம் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -1.030 |
| 4 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -0.555 |
| 5 | கனடா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.526 |

போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, ச-சமனிலை மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி

# சர்வதேச அளவில் இந்தியாவின் கரம் வலுவடைகிறது என்கிறார் மோடி!



சர்வதேச அளவில் இந்தியாவின் கரம் வலுவடைந்து வருவது குறித்தும், சமீபத்திய ஒப்பந்தங்கள் குறித்தும் பிரதமர் மோடி கருத்து வெளியிட்டுள்ளார்.

டில்லியில் நடைபெற்ற உலகளாவிய வர்த்தக மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உருவான 70 ஆண்டுகால உலக ஒழுங்கு தற்போது மாறி வருநிறது என்றும் உருவாகி வரும் புதிய உலக ஒழுங்கில் இந்தியா ஒரு முக்கியமான அடித்தளமாக இருக்கும் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடனான பேச்சுகளைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா இந்தியப் பொருள்களுக்கான வரியை 50 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாகக் குறைத்துள்ளது.

இதன் மூலம் இந்தியாவின் புடைவை, தோல் பொருள்கள், விவசாய விளை பொருள்கள் மற்றும் சிறு தொழில்கள் பெரும் பயனடையும்.

அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவில் இருந்து சுமார் 500 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆற்றல் மற்றும் தொழில்நுட்பப் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்யவுள்ளது.

முந்தைய காலங்களில் இந்தியா நெருக்கடி நிலைகளின் போது மட்டுமே சீர்திருத்தங்களை மேற்கொண்டது. ஆனால் இப்போது, இந்தியா "சீர்திருத்த எக்ஸ்பிரஸ்" வேகத்தில் செயற்படுகிறது என்றும் இவை யாருடைய கட்டாயமுமின்றி நாட்டின் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட முடிவுகள் என்றும் அவர் கூறினார்.பிரதமர் மோடி சமீபத்தில் மேற் கொண்ட இராஜதந்திர நகர்வுகள் இந்தியாவின் சர்வதேச செல்வாக்கை உயர்த்தியுள்ளன.

உள்ளூர் நாணயங்களிலேயே (ரூபாய் மற்றும் ரிங்கிட்) வர்த்தகம் செய்ய இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. இது டொலரைச் சார்ந்திருப்பதை குறைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு தற்போது 16 வீதமாக உள்ளது. இது விரைவில் இன்னும் அதிகரிக்கும் என்றும், இந்தியா விரைவில் உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என்றும் பிரதமர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. யாருக்குமே அடிமை கிடையாது ஆனால் தி.மு.கவோ கங்கிரஸ்க்கு அடிமை

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு



அதிமுக சுதந்திரமான கட்சி. அதிமுக யாருக்கும் அடிமை கிடையாது. ஆனால், திமுக காங்கிரசுக்கு அடிமையாக இருக்கிறது என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் தொகுதிக்கு உட்பட்ட அரியப்பம்பாளையத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அதிமுக சுதந்திரமான கட்சி. அதிமுக யாருக்கும் அடிமை கிடையாது. ஆனால், திமுக காங்கிரசுக்கு அடிமையாக இருக்கிறது.

திமுக - காங்கிரஸ் கூட்டணி தற்போது ஆட்டம் கண்டுவிட்டது. இந்தத் தேர்தலில் அந்தக் கூட்டணி நீடிப்பது சந்தேகமே.

நான் படிப்படியாக உழைத்து முதலவர் நிலைக்கு வந்தவன். ஆனால் ஸ்டாலின் தனது தந்தை வழியில் அந்தப் பதவியைப் பெற்றவர்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முழுமையாகச் சீர்குலைந்துள்ளது.

கொலை, கொள்ளை மற்றும் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

பார்கள் மூலம் ஊழல் செய்து, அந்தப் பணத்தைக் கொண்டு வாக்காளர்களை விலைக்கு வாங்க திமுக திட்டமிட்டுள்ளது.

மின்கட்டணம் 62% உயர்த்தப்பட்டிருப்பதையும், நகராட்சிகளில் குப்பை வரி மற்றும் குடிநீர் கட்டண உயர்வையும் சுட்டிக்காட்டி "வரி மேல் வரி போட்டு மக்களை வதைக்கிறார்கள்".

திமுக ஆட்சியில் கல்வித்தரம் குறைந்துவிட்டது. அதிமுக ஆட்சியின் சாதனைகள் உச்சத்தை எட்டின.

11 மருத்துவக் கல்லூரிகள், 7 சட்டக் கல்லூரிகள், 21 பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 28 கலை அறிவியல் கல்லூரிகளை எனது ஆட்சியில் கொண்டு வந்தேன்.

அதிமுக ஆட்சியில் உயர்கல்வி கற்போரின் விகிதம் 52% ஆக இருந்தது, தற்போது அது 48% ஆகக் குறைந்து விட்டது.

"நாங்கள் திட்டங்களைக் கொடுத்து மக்களைச் சந்திக்கிறோம். ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்துக் காலிப் பணியிடங்களும் நிரப்பப்படும்."- என்றார்.

## அமெரிக்காவுக்கு ஈரான் தளபதி எச்சரிக்கை

# போர் ஒன்று நடந்தால் ட்ரம்புக்கு இது பாடமாகவே இருக்குமாம்!

அமெரிக்கா போரை தொடங்கினால் அது ட்ரம்புக்குப் பெரிய பாடமாக இருக்கும் என்று ஈரான் ராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

ட்ரம்புக்கான பாடமாக போர் இருக்கும் அமெரிக்கா - ஈரான் இடையிலான போர் பதற்றம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. இரு நாட்டுத் தலைவர்களும் முரணான கருத்துகளைத் தொடர்ந்து தெரிவித்து வருவது நிலைமையை மிகவும் மோசமடைய செய்து வருகிறது.

இந்த நிலையில் ஈரானிய ஆயுதப் படைகள் தலைமை தளபதி மேஜர் ஜெனரல் சையத் அப்துல்ரஹீம் மௌசவி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய போது, அமெரிக்காவின் ஆக்ரோஷமான ராணுவ நடவடிக்கைகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

மேலும் வெளியுறவு கொள்கையின் முரண்பாடுகளையும் சுட்டிக்காட்டிய அவர், ஒரு புறத்தில் போருக்கு தூண்டுவதாகவும், மறுபுறத்தில் பேச்சுக்கு அழைப்பதாகவும் குறிப்பிட்டார்.



போருக்கு ட்ரம்ப் விரும்பினால், அவர் ஏன் பேச்சுக் குறித்துப் பேச வேண்டும்? என சையத் அப்துல் ரஹீம் மௌசவி கேள்வி எழுப்பினார்.

மேலும் ட்ரம்பின் கருத்துக்கள் அற்பமானது மற்றும் தகுதியற்றது என்றும் உலகத் தலைவருக்கு தகுதியற்றவை எனவும் விமர்சித்துள்ளார்.

அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் ஈரானின் பதிலடித் தாக்குதல் வெறும் தற்காப்புத் தாக்குதலாக மற்றும் இருக்காது என்று மேஜர் ஜெனரல் தெளிவுபடுத்தியுள்ளார்.

# பிரிட்டனில் வேகமாக பரவும் நோயால் குழந்தைகளுக்குப் பெரிதும் பாதிப்பு!

பிரித்தானியாவின் வடக்கு லண்டனில் உள்ள பாடசாலைகளில் தட்டம்மை வேகமாக பரவி வருகிறது.

வடக்கு லண்டனின் என்ஃபீல்டில் உள்ள 7 பாடசாலைகள் மற்றும் ஒரு முன்பள்ளி ஆகியவற்றில் தட்டம்மை வேகமாகப் பரவி வருகிறது என்று முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

என்ஃபீல்ட் மற்றும் ஹாரிங்கியில் குறைந்தது ஏழு பாடசாலைகளில் தொற்றுக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன, மேலும் அது பரவி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுவரை 60 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நகர மக்கள் பயணம் செய்வதால் இந்தத் தொற்று நோய் மிகப்பெரியளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று கவலைகள் வெளியிடப்பட்டுள்ளன.

என்ஃபீல்டின் பொது சுகாதார இயக்குநர் மருத்துவர் இது தொடர்பில் எச்சரித்து வருகின்றார்.

பொதுவாக சளி போன்ற அறிகுறிகளுடன் தொடங்கும் தட்டம்மை, சில நாள்களுக்குப் பிறகு ஒரு சொறி ஏற்படும் என்றும் ஒரு பாதிக்கப்பட்ட நபரிடம் இருந்து தடுப்பூசி போடப்படாத 18 பேர் வரை பரவக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

# காசாவில் மீண்டும் வான் தாக்குதல்: 8 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்!

காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 8 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

காசா பகுதியில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் நடத்திய இரவு நேர வான்வழித் தாக்குதலில் இவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பாலஸ்தீன ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் பகுதியில் நடந்த தாக்குதலில் கிட்டத்தட்ட 4 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். அதே போல வடக்கு காசா பகுதியில் ஜபாலியா அருகே 4 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.



இஸ்ரேலிய படையினர் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக பாலஸ்தீன ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஹமாஸ் படையினரும், இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் தற்போதுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி விட்டதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

காசா எல்லைப் பகுதியில் உள்ள மஞ்சள் கோடு எனப்படும் பாதுகாப்பு எல்லையை தாண்டி 5 ஆயுதமேந்திய தாக்குதல்தாரிகள் முன்னேறியதால் இஸ்ரேலிய படையினர் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் தற்போது உள்ள போர் நிறுத்த நடைமுறைகள் தொடர்வதாகவும் இஸ்ரேலிய தரப்பினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் -16.02.2026

## மேஷம்

இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.

## ரிஷபம்

இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிர்பார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மிதுனம்

இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

## கடகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.

## கன்னி

இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## துலாம்

இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

## விருச்சிகம்

இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

சனி சம்பந்தமான பிரச்சினை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -16.02.2026




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாக இன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் பதட்டம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏற்படும்.




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




# இன்று முதல் புத்தளம் வரை ரயில் சேவை

**(உடப்பு நிருபர்-க.மகாதேவன்)**

புத்தளம் ரயில் பாதையிலான ரயில் சேவைகள், இன்று முதல் புத்தளம் ரயில் நிலையம் வரை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, இன்று முதல் புத்தளம் ரயில் பாதை முழுமையாகத் திறக்கப்பட்டு, கொழும்பு கோட்டையிலிருந்து புத்தளம் வரை ரயில்கள் இயக்கப்படும் என அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

“டித்வா” சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்கள் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த இந்தப் பாதையிலான பயணிகள் ரயில் சேவைகள், பல கட்டங்களின் கீழ் நீர்கொழும்பு, கொச்சிக்கடை, நாத்தாண்டிய, குடாவெவ ஆகிய ரயில் நிலையங்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தன.

இறுதியாக டிசம்பர் 29ஆம் திகதி சிலாபம் ரயில் நிலையம் வரை சேவைகள் நீடிக்கப்பட்டன.

சிலாபம் மற்றும் புத்தளம் ரயில் நிலையங்களுக்கு இடையே அமைந்துள்ள பத்துளுஓயா பாலத்திற்கு அருகில் ரயில் பாதை நீரில் அடித்துச் செல்லப்பட்டமை, தில்லடிய உப ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பகுதியில் ரயில் பாதையில் மண் சரிவு ஏற்பட்டமை, மானுவன்கம உப ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பல இடங்களில் தெதுரு ஓயாவினால் ரயில் பாதைக்குக் கீழ் பகுதி அரிப்புக்குள்ளானமை போன்ற பாரிய அனர்த்தங்கள் காரணமாகவே புத்தளம் வரையான ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. எனினும் இன்று முதல் பயணிகள் ரயில் சேவைகள் புத்தளம் வரை நடைபெறவுள்ளன,